587

பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில் தருதலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-4 தருதலம், மாம்பாக்கம் ; நந்தன, ஆவணி ; 29—8—52. தளிர்-48

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## தலைமை முயற்சி

உலகில் வாழ்வார் அனைவரும் தத்தம் புலன்களைத் தீய வழிகளிற் செல்லாமற் பாதுகாத்தலையே பெரிதும் விரும்புவர். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐவகை அறிவும் மறந்தும் இழுக்கான செயல்களில் ஈடுபடாதிருக்க முயல்வோர் முயற்சிகள் பல திறப்பட்டன வாகும். நல்லார் இணக்கம், இறைவழிபாடு, யோக நெறிகள் என்று அவை பல்வேறு வகைகளாக மக்களால் கையாளப் படுகின்றன. கானம் புகுந்து கடுந்தவ மியற்றிப் புலன்களைச் செந்நெறியிற் செலுத்த விழைவாரும் பலருண்டு. இவர் முயற்சிகளெல்லாம் ஒரோவொரு காலங்களில் தடுமாற்றம் அடைய நேரினும் நேரலாம். காலம், கலை, நாகரிகங்களாகிய பெரு வெள்ளங்கள் இத்தகையோர் நெறிகளைச் சடுதியில் மாற்றியமைக்கவும் கூடும். ஆகவே, இவர் முயற்சிகள் இயல்புடைய வல்ல. வலிந்து கையாளப்படுவன என்பது தோற்றமாகத் தெரிகிறது.

நல்லொழுக்க நெறியில் மனையறத்தில் ஈடுபட்டு வாழ்வான், மேற் கூறிய முயற்சியாளர் சாதிக்க முடியாத அருஞ் செயலை எளிதில் சாதிக்க முடிகிறது. பிற வலிந்த முயற்சிகளெல்லாம் இவ்வாழ்வானுக்குத் தேவையில்லை. நல்லவர் உறவு, கடவுள் உணர்ச்சி, என்பன போன்ற ஒழுக்கங்கள் யாவும் இல்லறத்தில் இயல்பாகத் தாமாகவே இடம் பெறுகின்றன. இவை பெறத் தனிமுயற்சிகள் தேவையில்லை.

அன்பும் உயிர் இரக்கமும் நீங்காத இல்லற வாழ்வில் திகழும் சிறப்பினை விட வேறு நோன்புகள் சான்றோர்க்கு உடன்பாடல்ல. நல்லாற்றினின்று வழுவாமல், மனைவி மக்கள் புடைசூழக் களித்து வாழும் அருள்வாழ்வின் முயற்சியே ஏனைய முயற்சிகள் எவற்றுக்கும் தலைமை என்பதனை விளக்குவதற் காகவே தெய்வப்புலமைத் திருவள்ளுவர் முதல் காந்தியடிகள் ஈறான கணிப்பருஞ் சான்றோர்கள் இல்லற வாழ்வில் திகழ்ந்து புகழுடம்போடு நம்மிடையில் இன்றும் வாழ்கின்றார்கள்!

**இயல்பினான் இல்வாழ்க்கை**
**வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை.**

இல்வாழ்க்கை இயல்பினான் வாழ்பவன் என்பான் – இல்வாழ்க்கைக்கண் நின்று அதற்குரிய இயல்போடு கூடி வாழ்பவன் என்று சொல்லப் படுவான்; முயல்வாருள் லல்லாம் தலை – புலன்களைச் செந்நெறியிற் செலுத்த முயல்வார் எல்லாருள்ளும் மிக்கவன்.

இயல்பு, வாழ்க்கைக் குரிய இயல்பாகிய அன்பும் அறனும் நீங்காமை. இவை அடிப்படையாகக் கொண்ட வாழ்வில், வீடு பேற்றுக் குரிய செயல்கள் தம் போக்கில் எளிதாக நிகழ்ந்து கொண்டே இருத்தலும், ஏனைய முயற்சியாளர் முயற்சிகள் ஒரோவொருகால் மாறிச் சிதைவதும் தேற்றுதற்கு, 'முயல்லாருள் எல்லாம் தலை' என்றார்.

வலிந்த பெரு முயற்சிகள் இன்றி எளிதில் பெருநிலைகள் தருதலால் இஃது தலையாயிற்று. ஆகவே இதனையே கொண்டு மற்றவைகளை விட்டு நீங்குக என்பது கருத்து.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**4-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(5-10-51 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

| இலை | நந்தன, ஆவணி, | தளிர் |
|---|---|---|
| 4 | 29-8-52 வெள்ளி | 48 |

## யாம் கண்ட — — நல்லோர்

(முன் தொடர்ச்சி)

தமிழியக்க உலகிற் சிறந்து நிற்கும் சென்னை மாதரசியார் திரு. வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார் அவர்களின் தந்தையாராகிய மேற்கண்ட பெரியார் அவர்களே, இவ்வூர்த் திருக்கோயிலின் அறக்காப்பாளராக அரசினரால் அமைக்கப்பட்டிருக்கிறார்.

அதிகாரத்துக்கு வந்ததும் முதலியார் அவர்கள் அத் திருவூர்ப் பதிகத்தை நல்ல தாளில் அழகுற அச்சிட்டுச் சென்னையிலிருந்து அச் சிற்றூர்க்குள்ள போக்கு வரவு வழிகள் பற்றிய குறிப்புகளையும் அதிற் சேர்த்து வழங்கி வருகின்றார்கள். திருக்கோயிலின் சீர்திருத்தத் திருப்பணிக்கும் குடமுழுக்குக்கும் கூட இதழ்கள் அச்சிட்டு முயன்று வருகிறார்கள்.

அவர்கள் பதிகத்தில் வரும் சில அடிகளை எடுத்துக் காட்டித் திருஞான சம்பந்தரை அக்காலத்தில் இவ்வூர்ப் பெருமக்கள் வரவேற்ற சிறப்பையும், "ஓரளவேனும் அதுபோல உங்களை நாங்கள் வரவேற்க முடியாமற் போயிற்றே! முன்னதாகத் தெரிவிக்காமலே வந்துவிட்டீர்களே!" என்றும் ஆரமையோடு சொல்லி ஆசிரியருடைய பெருமைகளையும் வழிபாட்டின்போது அவ்வூர்க்கு விளக்கி எங்களை வரவேற்றார்கள்.

வழிபாடு முடிந்தபின் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்று எங்கள் எல்லோருக்கும் (பத்துப் பேர்) சுவையான உணவும் பாலும் கொடுத்து உணர்ச்சியோடு இரவு நெடுநேரம்வரை எங்களோடு அளவளாவிக் கொண்டிருந்து மறுநாள் காலையிலும் எங்களுக்குச் சிற்றுண்டி முதலியன கொடுத்து மாட்டு வண்டியில் எங்களை ஊர்தி (பஸ்) வரை அனுப்பி வைத்த அப் பெரியாரின் பேரன்பும் வேளாண்மைப் பண்பும் என்றும் மறக்கற்பாலதன்று. அவர்கள் சென்னையிலேயே பல ஆண்டுகள் இருந்து பழக்கப்பட்டவர்களானாலும், இப்போது சிறிய கடை வசதிகூட இல்லாத அச் சிற்றூரில் இருந்து கொண்டு, வேளாளர் சங்க வயல்களையும், மேற்படி திருக்கோயிலையும் மேற்பார்வை இட்டுக் கொண்டு தம்மாலியன்றவரை அப் பக்கங்களில் உள்ளவர்கட்கு நன்மையும் தம்மை அண்டியுள்ள தாழ்த்தப் பட்ட மக்களுக்குக் கல்வியும் நல்லுணர்ச்சி நற்பழக்கங்களும் கொடுத்துக் கொண்டிருப்பதை நினைக்கிற போது அலுவலில் ஓய்வு பெற்றுள்ளவர்கள் எல்லோரும் இவர்களைப் போல் சிற்றூர்களில் இருந்து தொண்டு செய்தால் நாடு எவ்வளவு நலம் பெறும் என்று தோற்றுகிறது. வாழ்க மாசிலாமணியார்! விளங்குக திருக்கள்ளில் திருப்பதி!

—ஆடலரசு.

## செய்யத்தக்கது!

"நாடெங்கும் 'உணவின்மை' 'பட்டினிச் சாவுகள்' என்பன போன்ற பேரொலிகள் வானத்தைப் பிளக்கின்றன. இது யாருடைய குற்றம்? நம்முடையதேயாகும். இரங்கத்தக்க இத் துன்ப நிலையை மாற்றியமைக்க நாம் உடனடியாக என்ன செய்கின்றோம்? ஒன்றுமில்லை! (ZERO!) மேடைகள்தோறும் வெற்றுரை வீசி வீணாரவாரம் புரிதல் தவிர மற்றேதும் நாம் செய்வதில்லை. இருள் மிக்க மூலை முடுக்குகளில் கரந்து வாழும் நீவிர் உடனே வெளிவருதற் கென்ன தடை? வெளியுலகங்கள் எந்நெறியைப் பின்பற்றி முன்னேறுகின்றன என்று நுங் கண்களை அகலத் திறந்து பார்ப்பதற் கென்ன? அப்போதல்லவா நும் குறுகிய உள்ளம் விரிவடைந்து எண்ணும் ஆற்றல் சிறக்கப் பெறுவீர்கள்!"

—விவேகாநந்த அடிகள்.

# மனந் திருந்த ஒரு மருந்து

கு. கார்த்திகேயன்.

பாலைவனத்திலே உச்சிவேளையிலே பல நாழிகைகள் நடந்து சென்றான் ஒரு வழிப்போக்கன். வியர்த்துப் பசித்துக் களைத்து, நன்கு தழைத்த ஒரு மரநிழலில் தரையில் தலை சாய்த்துப் படுத்தான், "மெல்லிய குளிர்ந்தகாற்று இப்போது வீசினால் இந்த உடலும் உள்ளமும் இளைப்பாறும்" என்று எண்ணினான்; மென்காற்று வீசி உடலைக் குளிர்ப்பித்தது. "யான்இருக்கும் இடம்தேடி என்பசிக்குச் சிற்றுண்டியும் மோரும் ஒருவர் கொணர்ந்தளித்தால் என்ன சுகம் விளையும்!" என்று நினைத்தான்; ஒருவன் அவ் வண்ணமே உருக்கமுடன் கொணர்ந்து உண்பித்துச் சென்றான். "யான் மாடமாளிகையிலே பலரை ஏவல் கொண்டு பெருஞ் செல்வமுடையவனாய், பொன்னூசலில் அமர்ந்திருந்தால், எவ்வளவு சிறப்பாகும்!" என்று சிந்தித்தான்; உடனே அவன் நினைத்தவாறே நிகழ்ந்ததைக் கண்டான். ஆச்சரியத்தில் மூழ்கினான். மகிழ்ச்சி பெருகினான். சற்று நேரத்திற்குப் பின், "படுக்கையடியிலிருந்து ஒரு பாம்பு கடித்தால் என் உயிர் என்னாகும்? என் பெருமை எவ்வாறு முடியும்?" என்ற எண்ணமும் எழுந்தது. அக்கணமே பாம்பாற் கடியுண்டான். மனம் பதைபதைத்தான். ஈதென்ன விந்தையென்று இதை வாசிப்போர் வியப்படைய வேண்டாம்.

வழிப்போக்கன் அமர்ந்த மரம் எண்ணியவற்றையெல்லாம் எண்ணியபடியே நிறைவேற்றித் தரும் கற்பக விருக்ஷம் என்பதை அவன் அறியாது போனான். இவனைப் போன்று அறியாது அல்லற்படும் மக்கள் ஏறக்குறைய நாம் அனைவருமே. நமது மனம் அமர்ந்திருப்பது ஒரு கற்பக மரத்தின் அடியிலே; எப்படி என்பீரோ; "இவ் வாழ்க்கையெனும் மரத்திற்கு வேர் மேலே, கிளைகள் கீழே. நமது வாழ்க்கையெல்லாம் மனதைப் பொருத்ததன்றோ. இம் மனத்திற்கு வேர், அதன் சக்திக்கும் முயற்சிக்கும் ஆதாரம், பரம்பொருளே, பகவானே, எல்லாம் வல்ல இறைவனே. அவரது திவ்விய திருவடி நிழலில் அமர்ந்திருக்கும் மனம், 'என்னால் ஒன்றும் செய்ய இயலாது' என்று நினைக்கிறது; அவ்வாறே ஆகட்டும் என்கிறார் பகவான். "உலகத்தை வென்று ஒப்பிலா மன்னனாவேன்" என்று நினைக்கிறது மற்றொரு மனம்; அப்போதும் அனுமதி யளிக்கிறார் பகவான். பகவானிடம் பக்ஷபாதமும் கொடுமையும் இல்லை. வேண்டுவோர்க்கு வேண்டுவனவற்றை அளிப்பார் அவர். உன் நினைப்பு எப்படி, அப்படி உன் செயல். மனம்போல வாழ்வு பெருமையும் சிறுமையும் தான்தரவருமே. கற்பக விருக்ஷத்தின் அடியில் அமர்ந்திருப்பதை மறப்பவன், முற்கூறிய வழிப் போக்கனைப் போல, துன்பத்தில் உழல்வான்; அதை உணர்ந்து விழிப்பாய் உழைப்பவன் உயர்ந்த கதியடைவான். ஆகலின் நாம் இவ் உண்மையை மறந்தாலும், பிறர் அதை மறந்தாலும், இதை நினைவூட்டுதலே போதும். நமது துன்பத்திற்கெல்லாம், நமது வறுமைக்கும் பாவத்திற்கும் குணக் கேட்டிற்கும் அனைத்திற்கும் இம் மறதியே காரணம். கற்பக விருக்ஷத்தின் அடியில் நமது மனம் உள்ளது. என்ற உணர்ச்சி மனநோயைத் தீர்க்கும் மருந்தாகும் நமது நாட்டினர் இந்நாளில் நம்பிக்கையை இழந்து பரிதவிக்கின்றனர்; அடிமைகளாகிக் கோழைகளாகி அல்லற் படுகின்றனர். நமது ஞான நூல்கள் நம்மை, "அழியாப் பரம்பொருளின் மக்களே" என்று அழைக்கின்றன. அதை நாம் நினைவில் பதித்துக் கொள்ளவேண்டும். திருடனையோ கயவனையோ, காமியையோ காணின், வெறுக்காது வெகுளாது வையாது "நீ இறைவனின் அருமைக் குழந்தை, பகவானின் செல்லப் பிள்ளை, இதனை மறந்தனையோ? இச் செயல்கள் உனக்கு தகுதியல்ல. உன்னிடம் தெய்வத் தன்மை அடங்கிக் கிடக்கின்றது, உன் தெய்வத்தன்மையை நினைக! அதை வெளிக்கொணர்க!" என்பது போன்ற அன்பு மொழிகளை வீர ஆவேசத்தோடு கூறுவோமாக. சிறுமையையும் குறையையும் பொருட்படுத்தாது, பெருமையை எடுத்துக் காட்டலே மனிதனை உயர்த்தவும் சுத்தமாகவும் உபாயமாகும். மனிதனது மனதினைத்திருத்த இது வொன்றே மருந்தாகும்.

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# நிலவுக்கு - - -

8

[அவன் பெயர்]

நிலவு,

நேற்றுத் தேன்மொழி இங்கு வந்திருந்தாள். அந்த எனக்குத் "தெரியாத மனிதனும்" உடன் வந்திருந்தான். தாத்தாவும் நண்பர் ஒருவர் வீட்டிற்குச் சென்றிருந்தார். வீட்டில் நான் மட்டும் தனியாக இருந்தேன்.

உள்ளத்தே எத்தனையோ நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருக்கும். அவைகளை நினைத்த உடனேயே வெளிப்படுத்துதல் இயலாத தொன்றாகும். வெளிப்படுத்தவும் கூடாது. அப்படி அது தன்னை மீறி வெளி வந்தாலும் அதை ஆபத்துக்கு அறிகுறி என்றே அறிஞர் கூறுவர்; கருதுவர்.

நாம் நினைத்த எண்ணங்களைக் காலம், இடம், நிலை இம் மூன்றையும் பயன் படுத்தி வெளியிட்டால் எண்ணிய எண்ணம் ஈடேறும்; பயன் கிட்டும்; போற்றப்படுவோம்.

"குலத்தைக் கெடுக்கின்றாயே; மணமாகாமுன்பு வேற்று மனிதனுடன் உல்லாசமாகப் பொழுதைப் போக்குகின்றாயே; வெட்கமில்லாமல் அவனையும் என் வீட்டிற்கு அழைத்து வந்திருக்கின்றாயே; பண்பு உன்னிடமிருந்து பறந்து விட்டதே; குணம் உன்னிடம் கொஞ்சமும் காணப்பட வில்லையே; உனக்குப் "படித்த முட்டாள்" என்ற பட்டம் கொடுக்கலாம் போன்றிருக்கின்றதே. என்றெல்லாம் என் மன உணர்ச்சியைக் கொட்டித் தள்ளிவிட வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. எழுந்த எண்ணத்தை யடக்கிக் கொண்டேன், "பொங்கிய எண்ணங்கள்" என்ற வெள்ளத்திற்கு, "அமைதி" என்ற அணை இட்டேன்.

பெண்கள் தங்கள் மன உணர்ச்சியை அடக்கிக் கொள்வதில் மிகவும் கெட்டிக்காரர்கள். என்று பல புத்தகங்களில் படித்திருக்கின்றேன். அது உண்மை என்று நேற்று நான் அனுபவத்தில் உணர்ந்தேன்.

வா தேன்மொழி! என்று குளிர்ந்த முகத்தோடு வரவேற்றேன், அவள் வந்தாள். அந்த முன்பின் தெரியாதவனும் உடன் வந்தான்.

"உட்காருங்கள்" என்று பொதுவாகச் சொல்லி வைத்தேன். இருவரும் நாற்காலியில் உட்கார்ந்தனர்.

"பேராசிரியர் வீடு என்று கூறினாயே, அது இதுதானா? தேன்மொழி. அவர் இப்போது எங்கே? என்று வந்தவன் பேச்சை ஆரம்பித்தான். அவன் பேசி முடிப்பதற்கும் தாத்தா வெளியிலிருந்து வருவதற்கும் சரியாக விருந்தது.

"இதோ! தாத்தா வந்து விட்டார்! உங்களிடம் முன் கூறினேனே அவர் இவர்தான். உங்களைப் பார்க்க வேண்டும் என்று வந்திருக்கின்றார்" என்று தாத்தாவைப் பார்த்து தேன்மொழி கூறினாள். இருவரும் அஞ்சலி செய்து கொண்டனர்.

"தம்பி பொருளாதார நிலைமை நாட்டிலே சீர் கேடான முறைமைக்கு வந்திருப்பதன் காரணம் பற்றி உன் கருத்தைக் கூற முடியுமா?" என்று கேட்டார் தாத்தா.

புதிதாக வந்திருந்தவர் பேச்சிலே வணக்கம் இருந்தது, குழைவு கூத்தாடியது. "அறிவு மிளிர்ந்தது."

வெளிநாட்டு வியாபாரம் உள்நாட்டுத் தொழிற் பெருக்கம்— இவை இரண்டுந்தான் ஒரு நாட்டை பொருளாதாரத் துறையில் மேம்பாடு அடையச் செய்கின்றன என்ற கருத்து முன்

நஞ்சன் கூடுபல்பொடி

பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,

54; பந்தர் தெரு, :: சென்னை-1

ணோர்கள் முதல் இந்நாள் இருக்கும் அறிஞர்கள் வரை ஒப்புக்கொண்ட ஓர் உயரிய கொள்கையாகும். உள் நாட்டுத் தொழிற் பெருக்கம் சொற்பப் பண முடையவர்களாலும் நடத்த முடியும். வெளி நாடுகளுடன் வியாபாரத்திற்கு வேண்டிய அந்த முதற் பணம் அவர்களிடம் காணுவ தரிது. ஆகையால் உள் நாட்டுத் தொழிற் பெருக்கத்திலேயே தம் நாட்டத்தைச் செலுத்துகின்றனர்.

ஆனால் பணக்காரர் என்பவர்கள் மேற் கூறிய இரண்டு முறைகளையும் செய்ய ஆற்றல் பெற்றவராய் அமைந்திருக்கின்றனர், ஆகையால் செல்வத்தை அவர்களே சுரண்டுகின்றனர். அதனால் பணக்காரன் மேலும் பணக்காரனாகின்றான். ஏழைகள் சுரண்டப் படுகின்றனர். ஏழை—தன் கையிலுள்ள பணத்தைப் பறி கொடுத்து மேலும் ஏழையாக மாறுகிறான். இந்த நிலைமை மாறினால் நாட்டின் பொருளாதார நிலைமை சீர்படும். இது தான் என் கருத்து'' என்றார் புதிய மனிதர்.

வந்திருப்பவர் பெயர் எழிலாகத் தானிருக்கும் என்று எண்ணினேன். இவர் பெயர் எழிலாகவிருந்தால், அந்தப் பெயரைக் கேட்ட போதெல்லாம் முகம் ஒரு மாதிரியாக அமைந்து விடுமே தேன் மொழிக்கு. இப்போது சிரித்துப் பேசிக் கொண்டிருக்கின்றாளே!

இந்தக் காரணத்தால் வந்திருப்பவர் பெயர் எழிலல்ல என்ற முடிவுக்கு வந்தேன். அவர் பெயர் என்னவென்று கேட்க வேண்டும் என்று என் மனம் துடித்தது. வார்த்தைகள் வெளி வர மறுத்தன.

பிறகு என்ன வெல்லாமோ அவர்கள் பேசினார்கள்.

"பாடாத வானொலி'', பறவாத புறா, ஓடாத மான், உலவாத தேனீ, உதியாத மதியம், மலாராத மொட்டு, கனியாத காய், கரிக்காத உப்பு, அணியாத வளையல்—அன்பில்லாத உள்ளம்.''

மேலே கூறியது அந்த புதிய மனிதர் 'அன்பு' க்குச் சொல்லிய பொருள் விளக்கம்.

அவர் பேச்சுப் பிடித்திருந்தது. செய்கை பிடிக்க வில்லையே.

பிறகு அவர்கள் வீட்டிற்குச் சென்று விட்டனர். தாத்தாவை அவர் யார்? எந்த ஊர், பெயர் இவைகளைக் கேட்டேன். அவர் சொந்த ஊர் சிதம்பரமாம். அண்ணமலை சர்வகலாசாலையில் B. A. Hons. பட்டத்திற்குப் படித்து வருகிறாராம். வேனிலுக்குத் தூரத்து உறவாம். பெயரை மறந்து விட்டாராம்.

எது எனக்கு முக்கியமாக வேண்டுமோ அதை அவர் மறந்து விட்டார்! உன் நிலை பற்றி உடனுக்குடன் அறிய ஆவல் கொள்ளும்,

உன் அன்பினள்

இளநகை.

---


## குருகுல — வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
விலை அணா 6.

2. திருமூலர் அருள்மொழிகள்
விலை அணா 4.

3. தணிகைமலை அல்லது அமைதி
விலை அணா 6.

4. திருக்கழுக்குன்றப் பதிகம்
விலை அணா 2.

5. கருக் கலை
விலை அணா 4.

6. மூன்று உண்மைகள்
விலை அணா 3.

7. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
விலை அணா 9.

8. முல்லைப்பாட்டு அகராதி
விலை அணா 8.

9. தொல்காப்பியம் அகத் திணையியல் விளக்கம்
விலை ரூ. 1.

10. ஆத்திசூடி - கருத்துரை
விலை 0-0-3.

**கிடைக்கும் இடம்:**

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம், P. O., (S.I.R.

# ஒன்றினர் வாழ்க்கை

(சி. து. க.)

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது உலகறிந்த பழமொழி. வாழ்க்கை இனிது நடந்து செல்லப் பொருள் வசதி இன்றியமையாதது. ஒரு சிலர் தம் முன்னோர் தேடிவைத்த பொருளைக் கொண்டு வாழ்க்கை நடத்துதல் தவிரத் தாமாகப் பொருள் தொகுத்தல் என்பதைக் கனவிலும் நினைப்பதில்லை. முன்னோர் முயன்று படைத்த செல்வம் செலவழிந்த பின்னர் என்ன செய்வது என்று அவர்கள் சிறிதும் எண்ணுவதில்லை. பொருள் தொகுத்தற்குரிய முயற்சிகள் ஏதுமின்றி வாழ் நாட்களை வீணாகக் கழித்த அன்னார் பிற்காலத்தில் வாழ வகைதெரியாமல் இடர்ப்படுவர்.

'குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத்தரும்'

என்று அவருள்ளம் வெதும்பி மெலியும்.

முன்னோர்க் குரிய செல்வத்தைச் செலவழிக்காமல், தாமாக முயன்று பொருள் தேடி வாழ்க்கையை நடத்துதல் சிறந்தது தான். ஆனால் அப் பொருள் தொகுப்பதிலும் அளவாக இருத்தல் வேண்டும். தம் முன்னோர் மிச்சப் படுத்தி வைத்த செல்வர், தம்மை வாழ வகைதெரியாத நிலையில் புகுத்துவது போன்று தாமும் பொருள்தேடி, வையத்துள் வாழ்வாங்கு வாழாமல், மிச்சப் படுத்தி வைத்துத் தாமும் பின் வருவாரைக் கெடுத்தல் நலமன்று. ஓரளவு வசதி செய்து வைத்துத் தம் பின் வருவார் முயற்சிகளுக் கெல்லாம் அது அடிப்படையாக அமைத்தலே செய்யத்தக்கதாகும்.

சிலர் இங்ஙனமின்றிப் பொருள் தொகுப்பதிலேயே தம் வாழ்நாட்களில் பெரும்பகுதியைச் செலவிடுகின்றனர். பொருள் தொகுக்கும் ஒரே நோக்கத்தில் மெய்வருத்தம், பசி, உறக்கம் முதலான எவற்றையும் அவர்கள் கருதுவதில்லை. வாழ்க்கையில் முதன்மையாகக் கவனித்தற்குரிய செயல்கள் எவையும் அவர்கள் நினைவில் தோன்றுவதில்லை. மனைவி மக்களாகிய சுற்றத்தையும் பெரிதாக எண்ணுவதில்லை.

இத்தகையோர் உள்ளத்தில் அருட்பண்பு சிறிதும் கிடையாது. உணர்ச்சியற்ற மரக் கட்டைகளும் இவர் உள்ளங்கட்கும் ஒரு சிறிதும் வேறுபாடில்லை. பணத்தை எத்திறத்தாலோ ஈட்டுவதும் இருப்புப் பேழையில் வைத்துப் பூட்டுவதும் ஆன இச்செயல்களிலேயே இவர்தம் வாழ்நாட்கள் செல்கின்றன. அன்பு, அறம் என்பனவற்றைக் கருத இவர்கட்கு ஒய்வேது!

பொருளையும் நல்லாற்றில் தேடுதல் வேண்டும். காதலுக்குரிய மனைவியோடு இல்லறக் கடப்பாட்டில் வழுவாது வாழ்க்கையும் இனிது நடத்தவேண்டும். அப்போதுதான் ஒருவன் பிறந்த நோக்கம் நிறைவேறும்.

பண்டைத் தமிழ்மக்கள் அன்பும் அருளும் நீங்காத வாழ்வில் திகழ்ந்தவர்கள். இக்காலத்துக் காணப்படும் உணர்ச்சியற்ற பொறிகள் போன்ற மக்கள் அந்நாளில் வாழ்ந்ததில்லை. வெறும் பொருள் தொகுப்பதிலேயே நாளெல்லாம் செலவிட்டுப் பசையற்ற வெறும்பாலையாக அவர்கள் வாழ்க்கை செல்லவில்லை. பொருளுக்கும் மேலாகக் காதலன்பில் இணைந்து வாழ்வதையே பெரிதாகக் கருதினர்.

இன்றும் நாம் பார்க்கிறோம். ஏழ்மையில் உழலும் எளிய தொழிலாளி, தன் உழைப்பின் முடிவில் தன் காதன் மனைவி மக்களோடு கலந்து மகிழும் மகிழ்ச்சியில் நூற்றில் ஒரு பங்கு கூடச் செல்வர் அடைய முடிவ

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்




பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

தில்லை. இக் கருத்தினைப் பண்டைத் தமிழர் நன்கறிந்திருந்தனர். இன்ப வாழ்வின் பண்பு குறையாதபடி செலுத்தும் நாட்களில் வாழ்வுக் குரிய பொருள் எளிதில் தேடமுடியும் என்பது அவர்கள் நம்பிக்கை. அந் நம்பிக்கையின் ஆற்றல் குறையாதபடிதான் அவர்கள் வாழ்ந்தார்கள். இக் கருத்துப் பண்டைத் தமிழர் இலக்கியங்களில் நன்கு விளங்குகிறது.

'பொருள் எப்போதும் எவ்வாற்றானும் தொகுக்கலாம். ஆனால் 'இளமை' என்னும் ஒரு படித்தாக நிலைத்து நிற்பதில்லை. இளமை சென்றபின் மறுபடி பெறுவதும் இன்பம் துய்ப்பதும் இயலாத தொன்று. இதனை மக்களாவார் ஒவ்வொருவரும் கவனித்தல் வேண்டும். ஆகவே, பொருள் வேட்கை காரணமாகக் காதன் மனைவியைப் பிரிந்து வாழ்தல் நலமன்று. அப் பொருளும் சென்று தேடுவோர் அப்படியே முகந்து கொள்ளும்படி வெளியிற் கிடப்பதில்லை. உரனும் ஆற்றலும் காலமும் செலவழித்துப் பெரு முயற்சியெடுத்துக் கொள்ளா விட்டால் அப்பொருள் கிடைப்பதில்லை. பொருள் தேடும் காலமெல்லாம் இளமை முதிராமல் நிலைத்திருப்பதுமில்லை. இனிய காதல் வாழ்வில் ஈடுபடும் மக்கள் தம் வாழ்க்கைக் கேற்ற பொருள் வசதி பெற்று உண்ணாமல் பட்டினி கிடந்தொழிவதில்லை. இளமையும் இன்பவுணர்வும் பெற்றோர் அவைகட்கும் மேலாக எண்ணி வெறும் பொருள் விருப்பத்திலேயே நாட்களைக் கழிப்பார்களா? ஆகவே வாழு நாட்களில், ஒரு கையால் தம் முடலைத் தழுவிக் கொண்டு, ஆடையின் ஒரு கூற்றை உடுப்பவரானாலும் ஒன்றி வாழ்வார் வாழ்க்கையே வாழ்க்கை! அவ் வாழ்க்கைக்குச் செல்வத்திலேயே கிடந்து புரளும் பிறர் வாழ்க்கை எக்காலும் ஈடாகாது.' இக்கருத்தினை,

“அரும்்பொருள் வேட்கையின்
உள்ளம் துரப்பப்
பிரிந்துறை சூழாதி ஐய
விரும்பிநீ
என்றோள் எழுதிய தொய்யிலும்
யாழநின்
மைந்துடை மார்பிற் சுணங்கும்
நினைத்துக் காண்
சென்றோர் முகப்பப்
பொருளுங் கிடவா (து)
ஒழிந்தவர் எல்லாரும்
உண்ணாதும் செல்லார்
இளமையும் காமமும் ஓராங்குப்
பெற்றார்
வளமை விழைதக்க
துண்டோ உளநாள்
ஒரோஒகை தம்முள் தழீஇ
ஒரோஒகை
ஒன்றன்கூ (று) ஆடை
உடுப்பவரே ஆயினும்
ஒன்றினர் வாழ்க்கையே
வாழ்க்கை அரிதரோ
சென்ற இளமை தரற்கு.”

என்னும் கலித்தொகைச் செய்யுள் இனிது விளக்குகின்றது.

இக்கருத்தில் திகழ்ந்த தமிழ் முன்னோர் வாழ்க்கை குளிர் நறுஞ் சோலையாகவும், இன்னறுந் தென்றலாகவும் இருந்ததென்பதற் கைய மில்லை. ஒன்றுக்கும் பற்றாத ஆசை, இமயம் போன்று குவியப் பேயாயலைந்து வாழ் நாட்களைப் பாலைவனமாக்கும் இக்கால மக்களும் இம்மாதிரி வாழ்வினை விரும்பிக் காலங் கடத்துங் காலமே நாட்டுக்கே நற்காலமென்று கூறலாம்.

# திருக்கழுக்குன்றச் சொற்பொழிவுகள்

(முன் தொடர்ச்சி)

திருமதி P. C. பத்மாவதி அம்மையார் B. O. L. (Hons) அவர்களின் திருவாசக மாட்சி பற்றிய உரை:

மக்கள் உள்ளத்தின் பண்பே ஒருநாட்டின் நாகரிகமாகின்றது. நாகரிகம் என்பது மக்கள் அணியும் ஆடை அணிகளல்ல. பிறர் துன்புறக் கூடாதென்று எண்ணுவதுதான் நாகரிகம். அது அன்பால் விளைவ[illegible]கும். அன்புடையோர்[illegible] நாடே நாடு. அன[illegible] தருவது சமயம். சமயத்திற்கு ஆதரவாக இக் கூட்டம் கூடியுள்ளது. அன்பே கடவுள் என்று சான்றோர் கூறுகின்றனர். நாமும் உணருகிறோம். திருமுறையை ஓதுவதால் அன்பு உண்டாகின்றது.

தீயைப்போல அறிவு நன்மை தீமைகளிரண்டும் பயன் படும். நன்மைக்கே அறிவுபோக வேண்டுமானால் சான்றோர் காட்டிய வழியில் செல்ல வேண்டும். உண்மையைப் பொய்யினின்றும் பிரித்துக் காட்டுபவர் சமயாசாரியர்கள். அவர்கள், மக்களை உய்விக்கப் பிறந்தவர்கள். இறைவனை அநுபவிக்கும் போதும் உலகுக்கு உதவ வேண்டுமென்ற இரக்கத்தால் உலகப் பற்று உடையவராய் இருந்தவர். இப்படிப்பட்ட பற்றால் வந்ததுதான் திருவாசகம்.

திருவாசகம் முழுவதையும் அனைவரும் நன்கு விளக்கிக் கொள்ள முடியாவிட்டாலும் அதனை ஓதுவதிலேயே பயன்

உண்டு. எடுத்துக் காட்டாகக் கன்றுக்குப் பால் சுரக்கும் பசு, வைக்கோல் துறுத்தப் பட்ட உயிரற்ற தோல் கன்றுக்கும் இரங்குகின்றது. அதைப்போலவே இறைவன், நாம் பொருள் தெரியாமல் ஓதுவதற்கும் உதவுகின்றான்.

திருவாசகம் பேரின்பத்தை விரும்புபவரால் விரும்பப்படுகிறது. முத்தியை அளிப்பதே இதற்குள்ள பெருமையாகும். இதற்குச் சிறப்புப்பாயிரம் எழுதியவர் இதனைத் 'தேன்' என்கிறார். தேன், தூய மலரிலிருந்து வருவது. இனிப்புடையது. [illegible]னியைப் போக்குவது. [illegible]ப்போலத் திருவாசகமும் [illegible]கும் போது இனிமையைத் தருகின்றது. பிறவிப் பிணியையும் போக்குகின்றது. சிவப்பிரகாசர் திருவாசகத்தை நான் மறையினும் சிறந்ததென்கிறார். நான்மறை பொற்கமலம் போல ஒரு சாராரே பயிலுதற்குரியதென்பர். திருவாசகம் மட்கலத்தைப்போல் கட்டுப்பாடேதும் இன்றி அனைவர்க்கும் பொதுவாய் உள்ளது. படிக்கும்போது உணர்ச்சி உண்டாக்குவதே சிறந்த நூல். திருவாசகத்தை ஓத ஓத அன்பின்ப உருக்க உணர்ச்சி மிகுகின்றது. வேதத்தை ஓதினால் அவ்வாறு இன்பம் தோன்றுவதில்லை. உருக்கமும் வருவதில்லை. திருவாசகம் அனைவரையும் உருக்கிவிடும். இதனை ஓதுபவர் அன்பராகிவிடுவர். இதைப்போன்ற பல காரணங்களால் திருவாசகம் மிகச்சிறந்து விளங்குகின்றது என்று கூறுகின்றார்.

இறைவனைப் பெற அவனருள் வேண்டும் என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார். ஆராய்ச்சியாலோ தவத்தாலோ மட்டும் இறைவனை உணர முடியாது. ஆனால் அன்புடையவரால் காண முடியும். எனவே நாம் அன்புடன் கசிந்துருக வேண்டும். இறைவனை அழுது அழுது பெறவேண்டும். அவர் எப்பொழுதும் அருளிக்கொண்டே இருக்கிறார். நாமே அதனை ஏற்காமல் இருக்கின்றோம். இது தாய் ஊட்டியும் குழந்தை உண்ண மறுப்பதைப் போன்றது. மறுக்கும்போது குழந்தையை அடித்து ஊட்டுவது போலவும் இறைவன் அருளுகிறான். அவன் காலமறந்து வேறுபாடு கருதாமல் பெய்யும் மேகத்தைப் போன்றவன். அவன் அருள் வெள்ளத்தைப் பெற்று நாம் உயரவேண்டும். அதற்குத் திருவாசகமே துணை."

புலவர் திரு. முருகவேள் **B. O. L.**, அவர்கள் 'மாணிக்கவாசகர் மாட்சி' என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு.

"மாணிக்கவாசகர் பெருமையை அறிய அவர் காலத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர் மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று பலரும் கருதுகின்றனர். மறைமலையடிகளார், சூரியநாராயண சாஸ்திரியார், நல்லசாமி பிள்ளை போன்றோர் இக்கருத்தையே கொண்டுள்ளனர். இவர் பெருமையை அறியப் பிற்காலத்து மூவர் இவரை எப்படி மதித்துள்ளனர் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

சங்க காலத்தில் முழுமுதலைப் பற்றிப் "பிறவா யாக்கைப் பெரியோன்" என்றெல்லாம் வருகின்றதேயன்றி, சிவம் என்னும் சொல் காணப்படவில்லை. இச்சொல்லை மாணிக்கவாசகர் தாமே உண்டாக்கினாரோ என்று எண்ணுகின்றேன். அல்லது பரப்பி இருக்க வேண்டும். எனவே இச் சொல்லை வழங்கிய பெருமையும் பரப்பிய பெருமையும் இவருக்கே உரியது.

தென்னாட்டில் பல கோவில்கள் இருப்பினும் கோவில் என்பது சிதம்பரத்தையே குறிக்கின்றது. அது எப்படி வந்ததென்று எண்ணும் போது மாணிக்கவாசகர் அவ்விடத்தில் முத்தி பெற்றதனாலும் பின்வந்த திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் அரிய பெரிய நூலை எழுதி அதனைச் சிறப்பித்ததனாலும் மூவரும் பிறரும் அதனைக் கோவில் என்றனர் போலும். அதனால் இவ்வழக்கு உண்டாயிருக்கலாம்.

இவருடைய சொற்களும் சொற்றொடர்களும் மூவராலும் போற்றிப் பயன் படுத்தப் பட்டுள்ளன. திருவாசகத்திற்கு அடுத்தபடி அப்பர் தேவாரம் உருக்கம் தருவது. அப்பர் "நாமார்க்குங் குடியல்லோம்...." என்னும் பாட்டைப் பாடியிருப்பது "தேவர்கோ அறியாத தேவதேவன்........" என்னும் திருவாசகத்திலிருந்து எடுத்துக் கையாளப்பட்டதென்று கூறலாம்.

திருவாசகத்தில் இயற்றப் பட்டுள்ள தாழ்மையைப் படித்துப் படித்துத் தான் அப்பரும் தாழ்மையைத் தெரிவித்து விளங்குகின்றார். பிறசான்றுகளாலும் அப்பர் திருவாசகத்தை நன்கு படித்துள்ளனர் என்பது தெரிகின்றது. இப்படி செய்வது அப்பருக்கு இழிவன்று; பெருமையே. மூவர் பெருமக்கள் திருவாசகத்தைப் போற்றிக் கொண்டதைக் கொண்டு மாணிக்கவாசகர் பெருமையை உணரலாம்.

(வரும்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)